பத்திரிக்கைச் செய்தி

திருமண உதவி தொகை வழங்க ரூ.1,000/- லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் சமூக நல விரிவாக்க அலுவலருக்கு 3 ஆண்டுகள் சிறை

புகார்தாரர் திரு.சகாப்தீன், விருத்தாசலம், மங்கலம்பேட்டை, மில்லத்நகரை சேர்ந்தவர். புகார்தாரர் தன்னுடைய மகளுக்கு கடந்த 2011ம் ஆண்டு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் தொகை திட்டத்தின்கீழ் வந்த காசோலை பெற விருத்தாசலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துக்கு சென்றுள்ளார். திருமதி.கலைச்செல்வி, ஊரக நல அலுவலர் மற்றும் திருமதி.இந்திராணி, சமூக நல விரிவாக்க அலுவலர் ஆகியோர் தங்களுக்கு ரூ.1,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளனர். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கடலூர் பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 13.07.2011 அன்று புகார்தாரரிடமிருந்து திருமதி.இந்திராணி, சமூக நல விரிவாக்க அலுவலர் மூலமாக திருமதி.கலைச்செல்வி, ஊரக நல அலுவலர் லஞ்சபணம் ரூ.1,000/- பெற்றபோது இருவரும் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கானது முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டத்தில் நடைபெற்று வந்த நிலையில் திருமதி.கலைச்செல்வி, ஊரக நல அலுவலர் இறந்து விட்டதால், இவ்வழக்கில் நேற்று 16.02.2026ந் தேதி திருமதி.இந்திராணி, சமூக நல விரிவாக்க அலுவலருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும் மற்றும் ரூ.10,000/- விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.